# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

**வகுப்பு : 9**

## சமூக அறிவியல்

நேரம் : 1.30 மணி] [மதிப்பெண்கள் : 50

**I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக.** 7x1=7

1. புவியின் திடமான தன்மை கொண்ட மேல்புற அடுக்கை ----- என்று அழைக்கிறோம்.
   அ) கருவம் ஆ) கவசம் இ) புவிமேலோடு ஈ) உட்கரு
2. சுண்ணாம்புப் பாறை நிலத்தோற்றங்கள் உருவாவதற்கு காரணம் --------.
   அ) பனியாறு ஆ) காற்று இ) கடல் அலைகள் ஈ) நிலத்தடி நீர்
3. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது -----.
   அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) கிரேட் ஏப்ஸ்
4. பின்வருவனவற்றுள் மெசபடோமியாவைச் சேர்ந்த நான்கு நாகரிகங்களின் சரியான கால வரிசை
   அ) சுமேரியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள் – பாபிலோனியர்கள்
   ஆ) பாபிலோனியர்கள் – சுமேரியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள்
   இ) சுமேரியர்கள் – அக்காடியர்கள் – பாபிலோனியர்கள் – அஸிரியர்கள்
5. குடவோலை முறையை பின்பற்றியவர்கள் ---------
   அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள் இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்
6. நாடுகளுக்கு இடையேயான மேம்பாட்டை ஒப்பிட அவர்களின் மிக முக்கிய பண்புகளில் ஒன்றாக கருதப்படுவது
   அ) வளர்ச்சி ஆ) வருமானம் இ) செலவீனம் ஈ) சேமிப்புகள்
7. கீழ்க்கண்டவற்றுள் எந்த நாட்டின் தேர்தல் முறையினை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.
   அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து
   இ) கனடா ஈ) ரஷ்யா

**II. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5x2=10
**வினா எண் 15–க்கு கட்டாயமாக விடையளி.**

8. சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்தளவுக்கு ஒரு முக்கியமான சான்றாக உள்ளன?
9. ஊகக் காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது?
10. காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
11. வானிலை சிதைவு என்றால் என்ன?
12. எந்த ஒரு நாட்டினுடைய முதன்மை வளமாக மனித வளம் கருதப்படுவது ஏன்?
13. பொருளாதாரத்தின் மூன்று துறைகள் யாவை?
14. அரசியல் கட்சி என்பதன் பொருள் விளக்குக.
15. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.

**III. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 23ம் வினாவிற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** 5x5=25

16. i) பழங்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ------ எனப்படும்.
    ii) இந்திய ---------- மக்களாட்சி முறையினைக் கொண்டுள்ள நாடாகும்.
    iii) இந்தியா தேர்தல் ஆணையம் ------ உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.
    iv) நிலத்தடி நீர் என்பது ---- வளங்களின் ஓர் எடுத்துக்காட்டாகும்.
    v) புவியின் மேற்பரப்பில் காணப்படும் வெப்பத்தின் சராசரி அளவு ------.

www.Padasalai.Net



CamScanner

17. வேறுபடுத்துக.

i) கருவம் மற்றும் மேலோடு வேறுபடுத்துக.

ii) இயற்பியலில் சிதைவு மற்றும் இரசாயனச் சிதைவு வேறுபடுத்துக.

காரணம் கூறு – மூடு பனி போக்குவரத்துக்கு ஆபத்தாக உள்ளது

18. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரிய சக்தி | – | பசிபிக் பெருங்கடல் |
| 2. | தேசிய கட்சிகள் | – | மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு |
| 3. | புவி அதிர்ச்சி | – | தேரி |
| 4. | பழங்கால மானுடவியல் | – | ஏழு |
| 5. | செம்மண் மேடுகள் | – | புதுப்பிக்கத் தக்க வளம் |

19. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் உறுதிபடுத்துக.

20. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?

21. எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை?

22. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.

23. நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகளைப் பற்றி விவரி.

IV. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1x8=8

24. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின.

25. சிந்து வெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி கூறுக.

26. உலக வரைபடத்தில் குறிக்கவும்.

1) பசிபிக் நெருப்பு வளையம்
2) புவி தட்டின் மண்டலம் ஏதேனும் 2 பகுதிகள்
3) செயல்படும் எரிமலைகள் ஏதேனும் இரண்டு
4) இமயமலை
5) ஆல்ப்ஸ் மலை
6) ஆப்பிரிக்கவின் கிழக்கு பிளவு பள்ளத்தாக்கு

www.Padasalai.Net



CamScanner




www.Padasalai.Net

CamScanner